மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்

**கல்விப்பொதுத்தராதரப் பத்திர (சாதாரணதர) பரீட்சை-2025**

மூன்றாம் தவணைப் பரீட்சை

| வரலாறு - II | 33 | T | II | மூன்றுமணித்தியாலம் |
|---|---|---|---|---|

மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்

**வினாப்பத்தரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல் :**

- **பகுதி I இல் வினா இலக்கம் 1 கட்டாயமானது.**
- **பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.**
- **எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி - I

1. (அ) (i) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

கோகன்ன, ஊராந்தோட்ட, செங்கடகல, கலாஓயா, சேனாநாயக்க சமுத்திரம், சொரபொரவாவி, தேவநகர,இலங்கைத்துறை, சல்வத்தோட்ட, கோட்டை, தெதுறுஓயா, காலி (12 புள்ளிகள்)

(ii) கீழே தரப்பட்டுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள ஒருபகுதி உலகப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.
கோவா, கருங்கடல், லண்டன், லிஸ்பன், கல்கத்தா, பத்தேவியா
(06 புள்ளிகள்)

(ஆ) (i) கீழே A, B, C, D எனத் தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A - யோதக் கால்வாயை அமைத்த மன்னன்

B - “விண்ணிலிருந்து பொழிகின்ற ஒரு துளி மழைநீரேனும் விவசாயத்திற்குப் பயன்படாது கடலுடன் கலக்க விடமாட்டேன்” என்ற கூற்றுடன் தொடர்புடைய மன்னன்

C - செயற்பாட்டு விஞ்ஞானத்தின் தந்தை என அழைக்கப்படுவர்

D - இரண்டாம் உலக யுத்த காலத்தில் பிரித்தானியாவின் பிரதமர் (04 புள்ளிகள்)

- **A, B என்பவற்றில் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை வினா இலக்க ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.**

**(A)**



(ii) 1. படம் Aயைப் பெயரிடுக.

2. இது அமைந்துள்ள நதி எது?

3. இது அமைந்துள்ள இலங்கையின் வரலாற்று நகரம் எது?

4. இதனை அமைப்பதற்குப் பிரதானமாகப் பயன்படுத்தப்பட்ட பொருள் யாது?

*(04 புள்ளிகள்)*

**(B)**



(iii) 1. படம் B ஐப் பெயரிடுக.

2. இதனைப் பொறிப்பித்த மன்னனின் பெயர் என்ன?

3. மேற்படி படம் காணப்படும் இலங்கையின் வரலாற்று நகரம் எது?

4. மேற்படி உருவில் காணப்படும் விலங்கினைப் பெயரிடுக. *(04 புள்ளிகள்)*

## பகுதி - II

2. (i) இலங்கையின் கி.பி 9 ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டில் சில குறியீடுகள் கீழே A,B,C எனத் தரப்பட்டுள்ளன. அவை குறிக்கின்ற விடயங்களை அதே ஒழுங்கில் உமது விடைத்தாளில் எழுதுக.

A - விசிறி

B – சந்திரப்பிறை

C - நாய், காகம் *(03 புள்ளிகள்)*

(ii) இலங்கையின் மேற்குப் பகுதியில் அமைந்திருந்த புராதன துறைமுகங்கள் நான்கினைப் பெயரிடுக. *(04 புள்ளிகள்)*

(iii) அநுராதபுரகால வர்த்தக முறைகளை இரண்டு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iv) புராதன இலங்கையில் இனங்களுக்கிடையே இணக்கப்பாடான சூழல் நிலவியது என்பதனை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. *(06 புள்ளிகள்)*

3. (i) இலங்கையில் இராஜரட்டைக் காலத்தில் அமைக்கப்பட்ட பாரிய குளங்கள் மூன்றின் பெயர்களைத் தருக. *(03 புள்ளிகள்)*

(ii) குளத்தொகுதி ஒன்று அமைக்கப்பட்டதன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட நன்மைகள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

(iii) அரசர்கள் நாட்டிற்கு ஆற்ற வேண்டிய இரண்டு பணிகளை உதாரணங்கள் மூலம் விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) வசப மன்னனின் அரசியல், பொருளாதாரப் பணிகளை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (06 புள்ளிகள்)

4. (i) இரண்டாம் நகரமயமாக்கல் கால இராசதானிகள் மூன்றினைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) பொலன்னறுவை இராச்சியம் வீழ்ச்சியடைந்தமைக்கான நான்கு காரணங்களைத் தருக. (04 புள்ளிகள்)

(iii) இரண்டாம் நகரமயமாக்கல் காலத்தில் நீர்ப்பாசன அமைப்புக்கள் தோற்றம் பெறாமைக்கான இரண்டு காரணங்களை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) "கோட்டை இராச்சிய காலம் சிங்கள இலக்கிய வளர்ச்சியின் பொற்காலமாகும்" மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (06 புள்ளிகள்)

5. (i) ஐம்பெரும் விவாதங்கள் இடம்பெற்ற இடங்களில் மூன்று இடங்களின் பெயர்களைத் தருக. (03 புள்ளிகள்)

(ii) பௌத்த மதத்தவர்களினால் அமைக்கப்பட்ட அச்சகங்கள் நான்கின் பெயர்களைத் தருக. (04 புள்ளிகள்)

(iii) ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்டின் இரண்டு பணிகளை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) தேசிய மறுமலர்ச்சி இயக்கத்தில் ஈடுபட்டவர்கள் தமது சீர்திருத்தங்களை முன்வைப்பதற்காக மேற்கொண்ட மூன்று உத்திகளை விளக்குக. (06 புள்ளிகள்)

6. (i) இலங்கையில் பிரித்தானியர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட பெருந்தோட்டப்பயிர்கள் மூன்றின் பெயர்களைத் தருக. (03 புள்ளிகள்)

(ii) 1833 கோல்புறூக்கின் பொருளாதார சீர்திருத்தங்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

(iii) பிரித்தானியருடைய ஆட்சியினால் இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட இரண்டு மாற்றங்களை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) 1978 அரசியல் யாப்பின் படி உருவாக்கப்பட்ட நீதிமன்றங்களின் கட்டமைப்பினைக் குறிப்பிட்டு அதில் ஒன்றின் பண்புகளை விளக்குக. (06 புள்ளிகள்)

7. (i) சுதந்திரத்தின் பின் 1953களில் இலங்கையில் உருவாக்கப்பட்ட மூன்று விவசாயக் குடியேற்றங்களின் பெயர்களைத் தருக. (03 புள்ளிகள்)

(ii) இலங்கையின் உலர்வலயத்தில் விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப் பட்டதற்கான நோக்கங்கள் நான்கு தருக. (04 புள்ளிகள்)

(iii) இலங்கை சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கு அரசு மேற்கொண்ட இரண்டு நடவடிக்கைகளை விளக்குக.

*(05 புள்ளிகள்)*

(iv) இலங்கையின் கல்வித்துறையில் ஏற்படுத்தப்பட்ட மூன்று மாற்றங்களை விளக்குக.

*(06 புள்ளிகள்)*

## பகுதி - III

*8.* (i) கீழே A, B, C எனத் தரப்பட்ட உபகரணங்களைக் கண்டறிந்தவர்களின் பெயர்களை அதே ஒழுங்கில் உமது விடைத்தாளில் எழுதுக.

A - வானொலி

B - தந்திமுறை

C - தொலைபேசி *(03 புள்ளிகள்)*

(ii) கைத்தொழில் புரட்சியினால் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட நான்கு மாற்றங்களைத் தருக.

*(04 புள்ளிகள்)*

(iii) கைத்தொழிற் புரட்சியினால் பொருளாதாரத் துறையில் ஏற்பட்ட இரண்டு மாற்றங்களை விளக்குக.

*(05 புள்ளிகள்)*

(iv) கைத்தொழிற் புரட்சியினால் ஏற்பட்ட மூன்று விளைவுகளை ஆராய்க.

*(06 புள்ளிகள்)*

*9.* (i) இரண்டாம் உலகயுத்தத்தில் ஈடுபட்ட நேசநாடுகள் இரண்டு, அச்சு நாடு ஒன்று ஆகியவற்றின் பெயர்களைத் தருக. *(03 புள்ளிகள்)*

(ii) கீழே A, B, C, D எனத் தரப்பட்ட கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடைகளை அதே ஒழுங்கில் உமது விடைத்தாளில் எழுதுக.

A - அடோல்ப் ஹிட்லர் சிறையில் இருந்த போது எழுதிய நூலின் பெயர்

B - 1936 இல் இத்தாலியால் ஆக்கிரமிக்கப்பட்ட நாடு

C - இரண்டாம் உலகயுத்த காலத்தில் இலங்கை மீது குண்டுத்தாக்குதலை மேற்கொண்ட நாடு

D - அணி சேரா நாடுகளின் அமைப்பு தோற்றம் பெறுவதற்குக் காரணமான இந்தியாவின் பிரதமர்

*(04 புள்ளிகள்)*

(iii) ஐக்கிய நாடுகள் சபை அமைக்கப்பட்டமைக்கான இரண்டு நோக்கங்களை விளக்குக.

*(05 புள்ளிகள்)*

(iv) இரண்டாம் உலகயுத்தத்தினால் உலக அரசியலில் ஏற்பட்ட மூன்று மாற்றங்களை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*